நான் யார்?

தலைவர் கலைஞர்

நான் யார்?

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

தலைமைக் கழக வெளியீடு:
திராவிட முன்னேற்றக் கழகம்
அண்ணா அறிவாலயம்,
சென்னை - 600 018.

மே 1999

35580

விலை: ரூ. 1/-

முகப்பு அட்டையில்:	முகமது கோயா, அண்ணா, தங்கள், காயிதேமில்லத், ராஜாஜி, கலைஞர் (1966 - விருகம்பாக்கம் தேர்தல் சிறப்பு மாநாட்டில்)

அச்சிட்டோர்: சில்வர் ஸ்ட்ரீக்,
174, பீட்டர்ஸ் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அறிவாலயம்

நூலின் நோக்கம்

சிறுபான்மை சமுதாயத்துக்கு; அதாவது முஸ்லீம் மற்றும் கிறிஸ்துவப் பெருமக்களுக்கு இவர்கள் தான் பாதுகாப்பாளர்கள் என்பது போலச் சிலர் ''பாவலா'' காட்டி வருகிறார்கள் அல்லவா - உண்மையிலேயே அவர்கள் எல்லாம் யார்? இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கையும் - பின்னர் தோன்றிய இந்திய தேசிய லீக்கையும் வகுப்பு வாத மதவாதக் கட்சி யென்று ஒதுக்கி வைத்தவர்கள் தான் அவர்கள்! பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது கரசேவையை ஆதரித்து முழக்கியவர்கள் - பக்கத்திலேயே பட்டாளத்தை வைத்துக் கொண்டு வேடிக்கை பார்த்தவர்கள்; அவர்கள் தான் இன்றைக்குக் கலைஞரையும் தி.மு.க.வையும் பார்த்து மதவாதத்திற்கு துணை போவதாகப் பூச்சாண்டி காட்டுகிறார்கள்.

''கருணாநிதி அவர்களே! நீங்கள் எங்கள் சமுதாயத்துக்கு செய்த நன்மைகளை இஸ்லாமிய மக்கள் என்றைக்கும் மறக்க மாட்டார்கள். நன்றியுணர்வுடன் இருப்பார்கள்'' என்று கலைஞரின் கைகளைப் பிடித்துக் கொண்டு மரணப் படுக்கையிலும் கூட கூறியவர் காயிதே மில்லத் என்பதை இஸ்லாமியப் பெருமக்கள் என்றைக்கும் நினைவிலே வைத்திருப்பார்கள் என்பது நிச்சயமான உண்மை.

அறிஞர் அண்ணாவும், ராஜாஜியும், காயிதேமில்லத்தும், மார்க்சிஸ்ட்டு ராமமூர்த்தியும், சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யும் ஓரணியில் நின்று காங்கிரசை வீழ்த்திய வரலாறு 1967இல் நடைபெற்றதை எவர்தான் மறுக்க முடியும்?

அந்தக் கூட்டணியிலிருந்த எந்தக் கட்சியும் தங்கள் கட்சிக் கொள்கைகளை விட்டு விடாத போது; இப்போது மட்டும் தேசிய ஜனநாயக கூட்டணியில் சேருவதால் தி.மு.க.வின் "சிறுபான்மையோர்க்கு பாதுகாப்பு" என்ற உறுதியான கொள்கை எப்படி ஊனமுற்று விடும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

என்றைக்குமே தி.மு.கழகம்

சாதிமத பேதமற்ற சமத்துவ

சமுதாயம் காண்பதையே

லட்சியமாகக் கொண்டு நடை போடும்.

சமூக ஒற்றுமை - மத நல்லிணக்கம் காணும் கழகத்தை எதிர்த்து குறுக்குசால் ஓட்டுவோரையும் - ஊழல் பெருச்சாளிகளையும் அவைகளுக்கு வால் பிடிப்போரையும் நாட்டுக்கு அடையாளம் காட்டிடத் தவறாது!

அந்த முயற்சிக்கு இந்தச் சிறு நூலும் ஒரு படைக் கருவியாகட்டும்.

திருச்சி செல்வேந்திரன்,
வெளியீட்டுச் செயலாளர்
தலைமைக் கழகம், தி.மு.க.

நான் யார்?

இஸ்லாமிய சமுதாயத்தினர் என்னை அழைத்து மேடையிலே நீ முதல் அமைச்சர், நீ இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கூறுகின்ற அளவிற்கு நான் அவர்களுக்கு அன்னியமானவனல்ல. உங்களில் 'ஒருவன் நான் என்பதை இன்றல்ல பல ஆண்டுக் காலமாகவே தெளிவுபடுத்தியிருக்கிறேன். இன்னும் சொல்லவேண்டுமேயானால் பள்ளிப் பருவத்திலேயே இஸ்லாமியர்களின் - இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநாடுகளில் - மிக முக்கியமாக நான் வாழ்ந்த திருவாரூரிலே நடைபெற்ற மாநாட்டிலேயே இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பு - அறுபதாண்டுகளுக்கு முன்பு - நான் கொடி பிடிக்கும் சிறுவனாக - இங்கே பறந்து கொண்டிருக்கின்ற பச்சைப் பிறைக் கொடியை கையிலே ஏந்துகின்ற சிறுவனாக அந்த மாநாட்டிலே கலந்து கொண்டேன் என்பதை இங்கே பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன். (கைதட்டல்)

அந்த மாநாட்டிற்குப் புதுக்கோட்டையில் திவானாக இருந்த கான் பகதூர் கலிபுல்லா அவர்கள் தான் தலைமையேற்றார்கள். அந்தக் காலத்தில் நான் பள்ளியிலே பயிலும் போது ஒரு கையிலே குடியரசு ஏடு, இன்னொரு கையிலே 'தாருல் இஸ்லாம்' என்கிற முஸ்லிம் லீக்கிற்காக பிரச்சாரம் செய்கிற நாளேடு - இவைகள்தாம் என்னுடைய கைகளை அலங்கரிக்கும்.

– *தலைவர் கலைஞர்*

(சென்னை கடற்கரையில் நடைபெற்ற
முஸ்லீம் லீக் பொன்விழாவில்)
(10-3-99)

உருது பேசும் முஸ்லிம்களை பின்தங்கியோர் பட்டியலில் இணைத்தேன்

இன்றைக்குச் சொல்வதல்ல, இஸ்லாமியப் பெருமக்கள் கூடுகின்ற இடத்தில் எல்லாம் அவர்களுக்கு வேதனை வருகின்ற நேரத்தில் எல்லாம் அந்த மக்களுக்கு நான் "உங்களுக்கு வருகின்ற ஆபத்து எங்களைத் தாண்டித்தான் வருமேயல்லாமல் வேறல்ல. அதை நீங்கள் மறக்க வேண்டாம்'' என்று உறுதியளித்திருக்கிறேன்.

உருது பேசுகின்ற முஸ்லிம்களும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டுமென்கின்ற கோரிக்கை வைக்கப்பட்டது.

அப்போது என்னுடைய அமைச்சரவையிலே இருந்த பிற்படுத்தப்பட்ட நலத் துறை அமைச்சர் எழுந்து அதற்கு சட்டத்திலே இடமில்லை என்றார். நான் அமைதியாக எழுந்து, " என்னுடைய அமைச்சர் சொல்வதைப் போல தமிழ் பேசுகின்ற முஸ்லிம்களைப் போல உருது பேசுகின்ற முஸ்லிம்களையும் பிற்படுத்தப் பட்டோர் பட்டியலிலே சேர்க்க சட்டத்திலே இடம் இல்லாவிட்டாலும் நீங்கள் நம்புங்கள்; என்னுடைய இதயத்திலே இடம் இருக்கிறது'' என்று நான் அன்றைக்கு சட்டமன்றத்திலே சொன்னேன்.

சொன்னதோடு நிறுத்தவில்லை. அடுத்த சில மாதங்களிலேயே உருது பேசுகின்ற முஸ்லிம்களையும் பின்தங்கியோர் பட்டியலிலே இணைத்தவன்தான் உங்கள் முன்னால் நின்று பேசிக் கொண்டிருக்கின்ற கருணாநிதி என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

– தலைவர் கலைஞர்

(சென்னை கடற்கரையில் நடைபெற்ற முஸ்லீம் லீக் பொன்விழாவில்)
(10-3-99)

முஸ்லிம்களுக்குத் தனி விகிதாசாரம்

இப்பொழுது தமிழகத்திலே இட ஒதுக்கீட்டிற்காக வகுக்கப்பட்டுள்ள 69 சதவிகிதம் உச்சநீதிமன்றத்திலே பிரச்சினைக்குரியதாக வழக்காடும் நிலையிலே இருந்து வருகிறது. அதற்கொரு முடிவு விரைவிலே ஏற்பட்டுவிடும். அந்த முடிவு ஏற்பட்டவுடன் முஸ்லிம்களுக்குத் தனி விகிதாசாரம் தருவதைப் பற்றி நான் பரிசீலித்து நல்ல முடிவெடுப்பேன் என்று சட்டப்பேரவையில் சொல்லியிருக்கிறேன். அந்த முடிவிலிருந்து நான் நழுவமாட்டேன்.

- தலைவர் கலைஞர்
(சென்னை கடற்கரையில் நடைபெற்ற
முஸ்லீம் லீக் பொன்விழாவில்)
(10-3-99)

முஸ்லீம் லீக்கும் - மார்க்சிஸ்ட்டும்

தி.மு.க.வோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கலந்துகொண்ட எந்தவொரு அனைத்துக்கட்சிக் கூட்டத்திற்கும் முஸ்லிம் லீக் தலைவர்கள் வரக்கூடாது என்று கண்டிப்பாக தெரிவித்தவர்கள் மார்க்சிஸ்ட்கள்.

அப்துஸ் சமது உயிரோடு இருந்தபோதும் சரி, இப்போது அப்துல் லத்தீப் இருக்கிறாரே, அவரையும் சரி அனைத்துக் கட்சிக் கூட்டங்களுக்கு அழைக்கக் கூடாது, அவர்களும் மதவாதிகள்தான் என்று சொல்லி - முஸ்லிம்களுக்கு இடம் தர மார்க்சிஸ்டுகள் ஒப்புக் கொள்ளவில்லை. ஒரு முறை அறிவாலயத்திலே அல்ல - அன்பகத்தில் அப்துஸ் சமது அவர்கள் உயிரோடு இருந்தபோது - இரண்டு முஸ்லிம் லீக் கட்சிகளும் ஒன்றாக இருந்த போது - ஒரு அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மார்க்சிஸ்டுகள் வந்தார்கள். முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த தலைவர்களும் வந்தார்கள். முஸ்லிம் லீக் தலைவர்கள் இருந்தால் நாங்கள் கலந்து கொள்ள மாட்டோமென்று கூறி மார்க்சிஸ்ட்கள் வெளியேற முனைந்தார்கள். உடனே அப்துஸ் சமது அவர்களும், லத்தீப் அவர்களும் தனியாக ஒரு அறையிலே சென்று அமர்ந்து கொண்டு அவர்கள் பேசிவிட்டுச் சென்றபிறகு நாங்கள் வருகிறோம் என்று கூறி வேறு ஒரு அறையில் தனியாக உட்கார்ந்து கொண்டார்கள்.

தலைவர் கலைஞர் பேட்டியிலிருந்து
(1-5-99)

எனக்கு அரசியல் லாபம் முக்கியமல்ல...

குஜராத், கேரளா, ஒரிசா, ஆந்திரா ஆகிய எல்லா மாநிலங்களிலும் கிறித்தவர்கள் மீது தாக்குதல் நடைபெற்றிருக்கிறது என்று பேசியிருக்கிறேன். பா.ஜ.க. ஆளுகின்ற மாநிலங்கள் என்று மாத்திரம் சொல்லவில்லை. காங்கிரஸ், கம்யூனிஸ்ட், தெலுங்குதேசம் ஆகிய கட்சிகள் ஆளுகின்ற மாநிலங்களிலும் அந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறேன். இந்தியாவில் எந்த இடத்தில் சிறுபான்மையோருக்கு தொல்லை ஏற்பட்டாலும் அவர்களுக்குப் பாதுகாப்பு கேடயமாக இருக்கக்கூடிய கட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அந்த உறுதியில் யாரும் சந்தேகப்படத் தேவையில்லை. இஸ்லாமியர்களிடமும், கிறித்தவர்களிடமும் என்னுடைய இளமைக் காலம் முதல் தொடர்ந்து பழகிய எனக்கு அவர்களுடைய சுக துக்கங்களில் என்றைக்கும் பங்கு உண்டு. அதையெல்லாம் இழந்துவிட்டு அரசியல் இலாபத்திற்காக எதையும் செய்யமாட்டேன்.

- தலைவர் கலைஞர் பேட்டியிலிருந்து

4-5-99

எப்போதும் பின் வாங்க மாட்டேன்!

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே சேர்க்கப்படாமல் இருந்த இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்க்கின்ற அந்த ஆணையை இதே சட்டமன்றத்தில் - வேறு யாரும் செய்யவில்லை, நான்தான் செய்தேன் என்பதை அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே ஒத்துக்கொண்டு நன்றி தெரிவித்திருக்கிறார். அதையும் மறந்துவிடக் கூடாது. அடுத்தகட்டமாக தனி இடஒதுக்கீடு யோசிக்கப்படும் என்றும் சொல்லி இருக்கிறேன். உறுதி அளித்திருக்கிறேன். நான் உறுதி அளித்தால் அதிலிருந்து எப்போதும் பின்வாங்க மாட்டேன்.

- தலைவர் கலைஞர்
சட்டப்பேரவையில்
7-5-99

முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு - வேலைவாய்ப்பு!

இதே மாமன்றத்தில் அப்துல் லத்தீப் அவர்கள் பேசும் போதும், பிறகு நடைபெற்ற இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாநாட்டிலே மறைந்த நண்பர் அப்துல் சமது அவர்கள் குறிப்பிட்டபோதும், முஸ்லிம்களுக்குத் தனியாக ஒரு இட ஒதுக்கீடு செய்வதற்கான ஏற்பாடுகளை எதிர்காலத்தில் இந்த அரசு செய்யும் என்று குறிப்பிட்டிருக்கின்றேன்.

உச்சநீதிமன்றத்திலேயிருக்கின்ற அந்த வழக்கு முடிந்தால்தான் அதைச் செய்ய முடியும் என்ற அந்தச் சட்டரீதியான காரணத்தையும் எடுத்துக் கூறியிருக்கிறேன். நிச்சயமாக இந்த ஆண்டுக்குள் இந்த வழக்கு முடிந்து வருகிற நிதிநிலை அறிக்கையிலே அது பற்றி அறிவிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- *தலைவர் கலைஞர்*
சட்டப்பேரவையில்
7-5-99

பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் உட்பட யாவருக்கும் நஷ்ட ஈடு

திருநெல்வேலியிலே ஏதோ முஸ்லிம்கள் மீது மாத்திரம்தான் என்.எஸ்.ஏ. (தேசிய பாதுகாப்புச் சட்டம்) போட்டதாகச் சொல்வது தவறு. திருநெல்வேலி மாவட்டம், தச்சநல்லூர் காவல் நிலையத்தைச் சேர்ந்த வழக்கு ஒன்றில் 20 வயதே ஆன சித்திரக்குமார், 25 வயதான முத்து, மாயா என்கிற மாயாண்டி, 19 வயதான மாரியப்பன் ஆகியோர் மீது வெடிகுண்டு பிரிவுச் சட்டம் மற்றும் என்.எஸ்.ஏ. சட்டத்தின் கீழ் திருநெல்வேலி - ஈரோடு இடையே செல்லும் புகைவண்டியை கவிழ்ப்பதற்காக இருப்புப் பாதையில் வெடிகுண்டு வைத்த வழக்கிலே அவர்களும் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. எனவே, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், இந்துவா, முஸ்லீமா, கிறித்தவரா என்று பார்க்காமல் அவர்கள் எவ்வளவு பெரிய வன்முறையில் ஈடுபட்டார்கள் என்கிற அடிப்படையிலேதான் அவர்கள் மீது வழக்கு போடப்படுகிறதே தவிர வேண்டுமென்றே ஒரு சமுதாயத்தின் வெறுப்பை தேடிக்கொள்வதற்கு இந்த அரசு ஒன்றும் விளையாட்டு பிள்ளை அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை சம்பவங்கள் குறித்து நீதி அரசர் கோகுல கிருஷ்ணன் அவர்களை நியமித்து இரண்டு கட்டமாக விசாரிக்கச் சொன்னோம். 1997 நவம்பர் கடைசி காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி குறித்தும், அதற்கு அடுத்து 1998 பிப்ரவரி 14ஆம் தேதி நடைபெற்ற குண்டுவெடிப்பு குறித்தும் இரண்டையும் விசாரிக்கச் சொல்லி நீதியரசர்

கோகுலகிருஷ்ணன் நியமிக்கப்பட்டார். அவர் இரண்டையும் விசாரித்து முழுமையாக அறிக்கை தருவதற்கு கால தாமதம் ஆகும் என்பதற்காகத்தான் அவர்கள் முதல் நிகழ்ச்சி பற்றிய முழு அறிக்கையை ஏற்கனவே தந்து, அதை இந்த அவையிலே வைத்து இருக்கிறோம்.

நஷ்டஈடு கேட்டவர்கள் யார் யார்? அந்தத் தகவலைத் தருவதற்குச் சிலபேர் அவரை அவசரப்படுத்தி இருக்கிறார்கள். காரணம் என்னவென்றால், இலட்ச ரூபாய்க்கு மேல் நஷ்டமடைந்தவர்கள் கொஞ்சம் வசதி படைத்தவர்கள். வசதியற்ற சாதாரண சிறு வியாபாரிகள் எல்லாம், எங்களுக்கு ஏற்கனவே இடைக்கால நிவாரணம் அளிக்கப்பட்டு இருந்தாலும், மீதமுள்ள தொகை வேண்டும் என்பதற்காக அவசரப்படுத்தி விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது நீதி அரசர் கோகுலகிருஷ்ணன் அவர்களிடத்தில் நஷ்டஈடு கோரி கொடுக்கப்பட்ட மொத்த மனுக்களின் எண்ணிக்கை 933 என்றாலும், 560 மனுக்களை பரிசீலனை செய்து நஷ்டஈடு தருமாறு அரசுக்கு அவர் சிபாரிசு செய்து இருக்கிறார்.

முதல் கட்ட பரிசீலனை 560. அதிலே இஸ்லாமிய மக்கள் 363 பேர். இந்துக்கள் 195 பேர். கிறித்தவர் 2 பேர். மொத்த நிவாரணம் 1 கோடியே 1 இலட்சத்து 67 ஆயிரத்து 45 ரூபாய். இதை அரசு ஏற்றுக் கொண்டு 7-5-1999 அன்றே ஆணை பிறப்பித்துவிட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

- *தலைவர் கலைஞர்*
சட்டப்பேரவையில்
10-5-99

நிரபராதிகள் மேல் நடவடிக்கை இல்லை

16 பேரை நெல்லை மேலப்பாளையத்தில், எந்தக் குற்றமும் இல்லாத பிள்ளைகளை சிறையிலே அடைத்து வைத்திருக்கிறார்கள் என்று திரு. அப்துல் லத்தீப் சொன்னார். நெல்லை மாவட்டம், மேலப்பாளையத்தில் சுமார் ஒன்றரை இலட்சம் முஸ்லிம் இனமக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்த ஒன்றரை இலட்சம் பேரில் ஒரு சிலர்தான் அல்-உம்மா இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்டு செயல்பட்டு வருகின்றார்கள். அல் உம்மா இயக்கத்தை மறைந்த அப்துஸ் சமது அவர்களோ அல்லது அருமை நண்பர் அப்துல் லத்தீப் அவர்களோ ஏற்றுக் கொண்டவர்கள் அல்ல; ஏற்றுக் கொள்ளப் போகிறவர்களும் அல்ல. ஒரு பெரிய சமுதாயத்திலே புல்லுருவிகளாக இப்படிப்பட்ட தீவிரவாத இயக்கங்கள் தோன்றி, கோவையிலே தமிழ்நாடு கண்டிராத அளவிற்குப் பயங்கரமான குண்டுவெடிப்புகள் நடத்தியதால் தமிழ்நாட்டு வரலாறு எந்த அளவுக்குக் களங்கப்பட்டுவிட்டது என்பதை அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. மற்ற குண்டுகளைத் தேடி எடுத்து அவைகளையெல்லாம் வெடிக்காமல், சக்தி இழக்கச் செய்யாமல் இருந்திருந்தால், கோவை மாநகரத்தில் இன்னும் எத்தனை பேர் கொல்லப்பட்டிருப்பார்கள்? எத்தனை குழந்தைக் குட்டிகள் மாண்டிருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்த்தால்தான் அந்த பயங்கரம் நமக்கு நன்றாகத் தெரியும். அந்த அளவிற்கு அல் உம்மா என்கின்ற இயக்கத்தில் தீவிரமாக ஈடுபாடு கொண்டு செயல்பட்டுவந்த சில பேர் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- *தலைவர் கலைஞர்*
சட்டப்பேரவையில்
10-5-99

கலைஞரின் தலைமைப் பாதுகாவலர்கள் இஸ்லாமியரே!

வேலூர் மாவட்டத்திலே போலீஸ் எஸ்.பி.யாக முஸ்லீமையே போடக்கூடாது என்று மரபு இருப்பதாக லத்தீப் தெரிவித்தார். நான் அவருக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் 1989ல் பதவியேற்றபோதுகூட புலனாய்வுத்துறை தலைமைப் பொறுப்பையே **ஜாபர் அலி** என்ற ஐ.பி.எஸ். அதிகாரியிடம்தான் கொடுத்திருந்தேன்.

தற்போது என்னுடைய பாதுகாப்பு பிரிவினுடைய முதன்மை அதிகாரியே **ஜாபர்சேட்**, ஐ.பி.எஸ். இஸ்லாமிய அதிகாரிதான்.

தேசீயப் பாதுகாப்புச் சட்ட (என்.எஸ்.ஏ) பிரிவுகளைக் கையாளுகின்ற அரசினுடைய முக்கிய செயலாளராக இன்றிருப்பவர் **பரூக்கி**, ஐ.ஏ.எஸ்., ஒரு இஸ்லாமிய அதிகாரிதான்.

- தலைவர் கலைஞர்
சட்டப்பேரவையில்
10-5-99

பல்கலைக் கழக துணை வேந்தர்கள்

1. மதுரை பல்கலைக் கழகம் - முனைவர் மு. சாலிஃகு

2. கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகம் - முனைவர் அப்துல் கரீம்

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (கலெக்டர்கள்) - மூன்று பேர்

1. மாலிக் பெரோஸ்கான் - தூத்துக்குடி மாவட்டம்

2. பஷீர் அகமது - தேனி மாவட்டம்

3. முகமது நசீமுதீன் - சேலம் மாவட்டம்

- தலைவர் கலைஞர்
சட்டப்பேரவையில்
10-5-99

காவல் துறையில் (போலீஸ்) இஸ்லாமியர்கள் எத்தனை பேர்?

1. மாவட்ட போலீஸ் அதிகாரிகள்(S.P)- 5 பேர்கள்

2. மாவட்டத் துணை போலீஸ் அதிகாரிகள் (A.D.S.P) - 3 பேர்கள்

3. டி. எஸ். பி - 16 பேர்கள்

4. ஆய்வாளர்கள் (இன்ஸ்பெக்டர்கள்) - 132 பேர்கள்

5. உதவி ஆய்வாளர்கள் (சப்-இன்ஸ்பெக்டர்கள்) - 231 பேர்கள்

6. காவலர்கள் (போலீஸ்காரர்கள்) - 4,217 பேர்கள்

இது மொத்த காவல்துறையினரின் எண்ணிக்கையில் 5.49 சதவீதம்!

- தலைவர் கலைஞர்
சட்டப்பேரவையில்
10-5-99

பின்குறிப்பு:- தமிழ்நாடு மாநில நிர்வாக தீர்ப்பாயத்தின் தலைவராக நீதிபதி எஸ்.எம். அப்துல் வகாப் இந்த ஆட்சியில் 29-5-99 அன்று நியமிக்கப்பட்டுள்ளார்.

'பொடா' சட்டம் கைவிடப்பட்டது

'பொடா' சட்டம் தமிழகச் சட்டசபையில் கொண்டு வரப்பட்டபோது அதை ஆதரித்த கட்சிதான் த.மா.கா. பிறகு சமது, லத்தீப் போன்றவர்கள் என்னைச் சந்தித்து, அதைப் பற்றி பேசியபோது அந்தச் சட்டம் பயன்படுத்தப்படமாட்டாது என்று நான் அவர்களுக்கு உறுதியளித்திருக்கிறேன்.

திரு. நல்லகண்ணு, திரு. சங்கரய்யா போன்றவர்கள் என்னிடம் அதைப் பற்றி பேசும்போதும், அவர்களிடமும் அதே உறுதியை அளித்திருக்கிறேன். அதற்கிடையே, இங்கே நிறைவேற்றப்பட்ட 'பொடா' சட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பிய போது - மத்திய அரசின் உள்துறை (Home Department) அந்தச் சட்டத்தில் சில விளக்கங்களைக் கேட்டது. அதனையொட்டி, தமிழக அரசு சட்டத்துறை அமைச்சர் ஆலடி அருணா தலைமையில் ஒரு குழுவை அமைத்துப் பரிசீலனை செய்தது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்புகூட நான் அதை சட்டமன்ற பொறுப்புக்குழுவிற்கு (Select Committee) விடலாமா என்று யோசித்து அதை சட்டமன்றத்திலேகூடக் கூறியிருந்தேன்.

ஒரு சட்டத்தை நிறைவேற்றிவிட்ட பிறகு அதை மீண்டும் செலக்ட் கமிட்டிக்கு விடுவது உசிதமல்ல என்று சட்டமன்றத்துறை கருத்து தெரிவித்த காரணத்தால் 'பொடா' சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில்லை, கைவிடப்பட்டது என்று சட்டப் பேரவையிலேயே முடிவாக அறிவித்துவிட்டேன்.

- தலைவர் கலைஞர் பேட்டியிலிருந்து
15-5-99

சுமூகமாகும் முஸ்லிம் - முஸ்லிம் அல்லாதார் உறவு

பேராசிரியர் ஆய்வக நூலகம் சென்னை-18 அறிவாலயம்

பி.ஜே.பி ஒரு மதவாதக் கட்சியாக - அது ஆளுங்கட்சியாக வருவதற்கு முன்பு இருந்தது என்பதற்கு பல எடுத்துக்காட்டுகள் உண்டு. ஆனால் பி.ஜே.பி மத்தியிலே ஆளுங்கட்சியாக வந்தபிறகு மதவாத வேகம் படிப்படியாக குறைந்திருக்கிறது என்பதற்கும் பல சான்றுகள் உண்டு.

குறிப்பாகப் பஞ்சாப் மாநிலத்தில் நாள்தோறும் இந்துக்கள், சீக்கியர்கள் தரப்பில் சுமார் 10 பேருக்குக் குறையாமல் கொலைகள் விழுந்து கொண்டிருந்தது. ஆனால் அகாலிதளம், பா.ஜ.க. உறவு ஏற்பட்ட பிறகு பஞ்சாப்பில் இந்துக்களுக்கும், சீக்கியர்களுக்கும் இடையே ஒரு சுமூகச் சூழ்நிலை உருவாயிற்று.

பரூக் அப்துல்லா பா.ஜ.க. ஆட்சியை ஆதரிக்கத் தொடங்கியபிறகு இப்போது காஷ்மீருக்குள் சுற்றுலாப் பயணிகள் சென்று வரக்கூடிய அளவிற்கு இந்துக்கள் முஸ்லிம்களுக்கிடையே இருந்த மோதல், வன்முறைகள் குறைந்திருக்கின்றன.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவிற்கு வந்தபோது அதை எதிர்த்து சில மதவாதக்குழுக்கள் கிளம்பிய போதும் அதை மத்தியிலே இருந்த பா.ஜ.க. அரசு தடுத்து நிறுத்தி அவர்கள் சுமூகமான முறையில் இந்தியாவிலே விளையாடி விட்டுச் செல்ல வழி வகுத்தது.

பாகிஸ்தான் - இந்தியா என்ற இரு நாடுகளுக்கு இடையே இருந்த பகை உணர்வு குறைகின்ற அளவிற்கு லாகூருக்கு திரு. வாஜ்பாய் அவர்கள் மேற்கொண்ட பஸ் பயணம் உதவிகரமாக இருந்தது.

இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையில் ஒரு இணக்கமான உறவை நிலை பெறச் செய்ய இப்போது தி.மு.க. எடுத்திருக்கிற நிலை பயன்படும் என்பதுதான் எங்கள் கருத்து.

- தலைவர் கலைஞர் பேட்டியிலிருந்து
(15-5-99)





ARASU A